ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2024/26 - 2017 ජුනි මස 20 වැනි අඟහරුවාදා - 2017.06.20

*2024/26 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 20 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி 94/47* (V)

**(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டம்**

*6(2) (ஆ) மற்றும் 21(2) (ஆ) என்னும் பிரிவுகளின் கீழான கட்டளை*

*(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் 6(2)(ஆ) என்னும் பிரிவினாலும் 21(2) (ஆ) என்னும்* பிரிவினாலும் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க றணவக்க ஆகிய நான், இக்கட்டளை மூலம்-

(அ) இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட “யுதகணாவ இரஜ மஹா விகாரை புனிதப் பிரதேசம்” என அழைக்கப்படும் காணி இடப்பரப்பு, மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கத்துக்காக நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக இருத்தல் வேண்டுமென வெளிப்படுத்துகின்றேன் ; அத்துடன்

(ஆ) நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக மேலேயுள்ளவாறு வெளிப்படுத்தப்பட்ட “யுதகணாவ இரஜ மஹா விகாரை புனிதப் பிரதேசத்துக்காக” உருவரைப் பௌதீக வரைபடமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமெனப் பணிக்கின்றேன்.

பாட்டலி சம்பிக்க றணவக்க,
மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு,
*2017, யூன் 12.*

1A – G 25764 – 27 (2017/6)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

யுதகணாவ இரஜ மஹா விகாரை புனித இடப்பரப்பைக் கொண்டுள்ள காணி இடப்பரப்பு

ஊவா மாகாணத்தில் மொனறாகலை மாவட்டத்தில் புத்தல பிரதேச செயலாளர் பிரிவினுள் புத்தல கோறளையின் சிறு பிரிவினுள் யுதகணாவ கிராமத்தில் அமைந்துள்ளதும், நில அளவையாளர் தலைமையதிபதியின் 2016, யூன் 8 ஆந் திகதிய MO/ BTT/ 2016/232 (T. P. No. 100016) ஆம் இலக்க சுவடெடுப்பின் மூலம் காட்டப்பட்டதும் பரப்பளவில் 25.4840 ஹெக்டேயாரைக் (62ஏ, 3றூ, 35.58பே.) கொண்டுள்ளதுமான காணி இடப்பரப்பு ; அதன் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு :- T. P. 100016
கிழக்கு :- T. P. 100016
தெற்கு :- T. P. 100016
மேற்கு :- T. P. 100016

7-94

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.